**செய்தி வெளியீடு எண்: 097** **நாள்: 05.02.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தில், 8 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதியை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தொழிற் கூடங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு குறைந்த கட்டணத்தில், அனைத்து வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகளை கட்டி வருகிறது.

திருப்பூரில் அதிக அளவிளான பின்னலாடை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருவதால், பெண் தொழிலாளர்கள் அதிகமுள்ள இப்பகுதியில், குறிப்பாக பிற மாநிலங்களிலிருந்து இங்கு வந்து பணி புரியும் பெண் தொழிலாளர்களின் நலனிற்காக தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்பு அடிப்படையில் திருப்பூர் மாவட்டம், நெருப்பெரிச்சல் கிராமத்தில், 1.20 ஏக்கர் நிலப்பரப்பில், 53,735 சதுர அடி கட்டட பரப்பளவில், 570 பெண் தொழிலாளர்கள் தங்கும் வகையில், 8 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்புதிய பெண்கள் தங்கும் விடுதியானது, 57 தங்கும் அறைகள், முதலுதவி மையம், சமையலறை, உணவு அருந்தும் அறை, பொழுதுபோக்கு அறை, பாதுகாவலர் அறை, குடிநீர் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.கே. சீனிவாசன். இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**